ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

பெரியாழ்வார் அருளிச்செய்த பெரியாழ்வார் திருமொழி

5.4 – சென்னியோங்கு

This document has been prepared by

Sunder Kidāmbi

with the blessings of

ஸ்ரீ ரங்க₃ராமாநுஜ மஹாதே₃ஶிகன்

His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

5.4 – சென்னியோங்கு

‡ சென்னி ஓங்கு ⋆
தண் திருவேங்கடம் உடையாய் ! ⋆
உலகு தன்னை வாழ நின்ற நம்பீ ! ⋆
தாமோதரா ! சதிரா ! ⋆
என்னையும் என் உடைமையையும் ⋆
உன் சக்கரப்பொறி ஒற்றிக்கொண்டு ⋆
நின் அருளே புரிந்திருந்தேன் ⋆
இனி என் திருக் குறிப்பே ॥ **5.4.1** ॥

பறவை ஏறு பரம் புருடா ! ⋆
நீ என்னைக் கைக்கொண்ட பின் ⋆
பிறவி என்னும் கடலும் வற்றிப் ⋆
பெரும் பதம் ஆகின்றதால் ⋆
இறவு செய்யும் பாவக் காடு ⋆
தீக்கொளி இவேகின்றதால் ⋆
அறிவை என்னும் அமுத ஆறு ⋆
தலைப்பற்றி வாய்க் கொண்டதே ॥ **5.4.2** ॥

எம்மனா ! என் குல தெய்வமே ! ⋆
என்னுடை நாயகனே ! ⋆
நின் உளேனாய்ப் பெற்ற நன்மை ⋆
இவ்வுலகினில் ஆர் பெறுவார் ⋆
நம்மன் போலே வீழ்த்தமுக்கும் ⋆

நாட்டில் உள்ள பாவம் எல்லாம் ⋆
சும்மெனாதே கைவிட்டோடித் ⋆
தூறுகள் பாய்ந்தனவே ॥ **5.4.3** ॥

கடல் கடைந்தமுதம் கொண்டு ⋆
கலசத்தை நிறைத்தால் போல் ⋆
உடல் உருகி வாய் திறந்து ⋆
மடுத்துன்னை நிறைத்துக் கொண்டேன் ⋆
கொடுமை செய்யும் கூற்றமும் ⋆
என் கோல் ஆடி குறுகப் பெறா ⋆
தட வரைத் தோள் சக்கர பாணீ ! ⋆
சார்ங்க விற் சேவகனே ! ॥ **5.4.4** ॥

பொன்னைக் கொண்டுரைகல் மீதே ⋆
நிறம் எழ உரைத்தாற் போல் ⋆
உன்னைக் கொண்டென் நாவகம் பால் ⋆
மாற்றின்றி உரைத்துக் கொண்டேன் ⋆
உன்னைக் கொண்டென்னுள் வைத்தேன் ⋆
என்னையும் உன்னில் இட்டேன் ⋆
என் அப்பா ! என் இருடீகேசா ! ⋆
என் உயிர்க் காவலனே ! ॥ **5.4.5** ॥

உன்னுடைய விக்கிரமம் ⋆
ஒன்றொழியாமல் எல்லாம் ⋆
என்னுடைய நெஞ்சகம் பால் ⋆
சுவர்வழி எழுதிக் கொண்டேன் ⋆
மன் அடங்க மழு வலங்கைக் கொண்ட ⋆
இராம நம்பீ ! ⋆

என்னிடை வந்தெம் பெருமான் ! ⋆
இனி எங்குப் போகின்றதே ॥ **5.4.6** ॥

‡ பருப் பதத்துக் கயல் பொறித்த ⋆
பாண்டியர் குலபதி போல் ⋆
திருப் பொலிந்த சேவடி ⋆
என் சென்னியின் மேல் பொறித்தாய் ⋆
மருப் பொசித்தாய் ! மல் அடர்த்தாய் ! ⋆
என்றென்றுன் வாசகமே ⋆
உருப் பொலிந்த நாவினேனை ⋆
உனக்குரித்தாக்கினையே ॥ **5.4.7** ॥

அனந்தன் பாலும் கருடன் பாலும் ⋆
ஐது நொய்தாக வைத்து ⋆
என் மனந்தன் உள்ளே வந்து வைகி ⋆
வாழச் செய்தாய் எம்பிரான் ! ⋆
நினைந்தென் உள்ளே நின்று நெக்குக் ⋆
கண்கள் அசும்பொழுக ⋆
நினைந்திருந்தே சிரமம் தீர்ந்தேன் ⋆
நேமி நெடியவனே ! ॥ **5.4.8** ॥

பனிக் கடலில் பள்ளி கோளைப் ⋆
பழகவிட்டு ⋆
ஓடி வந்தென் மனக் கடலில் வாழ வல்ல ⋆
மாய மணாள நம்பீ ! ⋆
தனிக் கடலே ! தனிச் சுடரே ! ⋆
தனி உலகே என்றென்று ⋆

உனக் கிடமாய் இருக்க ⋆
என்னை உனக்குரித்தாக்கினையே ॥ **5.4.9** ॥

‡ தட வரைவாய் மிளிர்ந்து மின்னும் ⋆
தவள நெடுங்கொடிப் போல் ⋆
சுடர் ஒளியாய் நெஞ்சின் உள்ளே ⋆
தோன்றும் என் சோதி நம்பி ! ⋆
வட தடமும் வைகுந்தமும் ⋆
மதிள் துவரா பதியும் ⋆
இட வகைகள் இகழ்ந்திட்டு ⋆
என் பால் இடவகை கொண்டனையே ॥ **5.4.10** ॥

‡ வேயர் தங்கள் குலத்துதித்த ⋆
விட்டுசித்தன் மனத்தே ⋆
கோயில் கொண்ட கோவலனைக் ⋆
கொழுங்குளிர் முகில் வண்ணனை ⋆
ஆயர் ஏற்றை அமரர் கோவை ⋆
அந்தணர் தம் அமுதத்தினை ⋆
சாயை போலப் பாட வல்லார் தாமும் ⋆
அணுக்கர்களே ॥ **5.4.11** ॥

அடிவரவு — சென்னி பறவை எம்மனா கடல் பொன்னை உன் பருப்பதம்
அனந்தன் பனி தடவரை வேயர் மார்கழி

சென்னியோங்கு முற்றிற்று

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்